திருச்சிற்றம்பலம்

# தேவாரத் திரட்டு

இஃது

சைவசமயாசாரிகள் நால்வர்

திருவாய்மலர்ந்தருளிய

தேவார திருவாசகமும்

நால்வரது

துதியும் சேர்ந்தது

ஸ்ரீ தனலட்சுமி புத்தக நிலையம்,
159, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு,
(ஸ்டான்லி மருத்துவமனை அருகில்)
சென்னை - 600 001.

விலை - 1-50.

திருஞான சம்பந்தர் அருளிய

# தேவாரப் பதிகங்கள்

—0—

## ★திருப்பிரமபுரம் பண் - நட்டபாடை

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக், காடுடைய சுடலைப் பொடிப் பூசியென் னுள்ளங்கவர் கள்வன், ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்த அருள் செய்த, பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. 1

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவை பூண்டு, வற்றலோடுகலனுப்பலிதேர்ந்தென துள்ளங்கவர் கள்வன், கற்றல்கேட்டலுடையார் பெரியார்கழல் கையாற் றொழுதேத்தப், பெற்றமூர்ந்த பிரமாபுரமேவிய பெம்மானி வனன்றே. 2

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரிது வென்னப்
பேர்பரந்த பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. 3

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விலங்கறுதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர் கள்வன்
மண்மகிழ்ந்த அர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பில்
பெண்மகிழ்ந்த பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. 4

ஒருமை பெண்மையுடயன் சடையன் விடையூருமிவனென்ன
அருமையாகவுரை செய்யவமர்ந்தென துள்ளங்கவர் கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலமிதுவென்ன
பெருமை பெற்ற பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. 5

---

★திருப்பிரமமென்பது - சீர்காழி.

மறைகலந்தவொலி பாடலோடாடலராகி மழுவேந்தி; யிறைகலந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர் கள்வன், கறைகலந்தகடியார் பொழிநீடுயர் சோலைக்கதிர் சிந்தப், பிறைகலந்த பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே.

சடைமுயங்குபுன லன்னனலன்னெரி வீசிச்சதிர் வெய்த, யுடைமுயங்குமர வோடுழிதந்தென துள்ளங்கவர் கள்வன், கடன்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ் சிறகன்னம், பெடைமுயங்கு பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே. 7

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த வுயரிலங்கையரை யனவலிகெற்றென துள்ளங்கவர்கள்வன் துயரிலங்குமுல கிற்பலவூழிக டோன்றும் பொழுதெல்லாம், பெயரிலங்கு பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. 8

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமறை யானு, நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங் கவர்கள்வன், வாணுதல்செய்மகளீர் முதலாகிய வையத்த வரேத்தப், பேணுதல்செய் பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே.

புத்தரோடு பொறியில் சமணும்புறங்கூற நெறிநில்லா, வொத்த சொல்லவுலகம் பலிதேர்ந்தென துள்ளங்கவர் கள்வன், மத்தயானைமது கவ்வுரிபோர்த்ததோர் மாயம்மிது வென்னப், பித்தர் போலும் பிரமாபுரமேவிய பெம்மானிவ னன்றே. 10

அரு நெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர் மேய, பெருநெறிய பிரமாபுரமேவிய பெம்மானிவன் றன்னை யொருநெறியமனம் வைத்துணர் ஞானசம்பந்தனுரை செய்த, திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்த்தெளி தாமே. 11

திருச்சிற்றம்பலம்

சுவாமி பெயர் - பிரமபுரீசர்,

தேவியார் - திருநிலை நாயகியம்மை

———

## திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம்-பண்-காந்தாரம்

### திருச்சிற்றம்பலம்

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்திரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன் றிரு வாலவாயான் றிருநீறே 1

வேதத்திலுள்ளதுநீறு வெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறு புன்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தகுவதுநீறு வுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்த திருவாலவாயான் றிருநீறே. 2

முத்தி தருவதுநீறு முனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறு தக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறு பரவவினியதுநீறு
சித்திதருவதுநீறு திருவாலவாயான் றிருநீறே. 4

காணவினியதுநீறு கவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பதுநீறு
மரணந்தகைவதுநீறு மதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறு திருவாலவாயான் றிருநீறே.

பூசவினியதுநீறு புண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறு பெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகெடுப்பதுநீறு அந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறு திருவாலவாயான் றிருநீறே. 5

அருத்தமதாவதுநீறு வவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறு வானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறு புண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்த திருவாலவாயான் றிருநீறே. 6

எயிலது அட்டதுநீறு விருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறு பாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறு சுத்தமாவதுநீறு
அயிலைப்பொலிதருசீலத் தாலவாயான் றிருநீறே. 7

இராவணன்மேலதுநீறு வெண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறு பாவமறுப்பதுநீறு
தாராவணமாவதுநீறு தத்துவமாவதுநீறு
வராவணங்குந்திருமேனி யாலவாயான்றிருநீறே. 8

மாலொடயனறியாத வண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண் மெய்யதுவெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவதுநீறு
வாலமுதுண்டமிடற்றெம் மாலவாயான்றிருநீறே. 9

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறு கருதவினியதுநீறு
வெண்டிசைப்பட்ட பொருளா ரேத்துந்தகையதுநீறு
வண்டத்தவர் பணிந்தேற்று மாலவாயான்றிருநீறே. 10

ஆற்றலடல்விடையேறு மாலவாயான் றிருநீற்றைப்
போறறிப்புகலிநிலாவும் பூசுரன்ஞான சம்பந்தன்
றேத்தித்தென்னனுடனுற்ற தீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள் பத்தும்வல்லவர் நல்லவர் தாமே. 11

## திருச்சிற்றம்பலம்

இப்பதிகம் பாண்டியராஜனுடைய சுரவியாதி தீர
அருளிச் செய்யப்பட்டது

சுவாமி பெயர் சொக்கநாதேசுவரர்,
தேவியார் மீனாட்சியம்மை

---

வேயுறுதோளி பண் - பியந்தைக்காந்தாரம்

## திருச்சிற்றம்பலம்

வேயுறுதோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணைதடவி, மாசறுதிங்கள் கங்கை முடிமே லணிந்தெனு ளமேபுகுந்த வதனன் ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே, மாசறுநல்ல நல்ல வவைநல்லநல்ல வடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை யிவைமார்பிலங்கவெரு தேறி ஏழையுடனே, பொன்பொதி மத்த மாலை

புனல்சூடிவந்தெ னுளமேபுகுந்த வதனு, லொண்பதொ டொன்ருெடேழுபதினெட்டோ டாறுமுடனுய நாள்கள வைதானன்பொடு நல்ல நல்ல வவைநல்ல நல்ல வடியா ரவர்க்குமிகவே. 2

உருவளர் பவளமேனி யொளிநீரணிந்து வுமையோ டும் வெள்ளைவிடைமேன், முருகலர் கொன்றைதிங்கண் முடி மேலணிந்தே னுளமேபுகுந்த வதனுற், திருமகள் கலைய தூர்தி செயமாது பூடுதிசை தெய்வமான பலவு மருநெதி நல்ல நல்ல வவைநல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே. 3

மதிநுதன் மங்கையோடு வடபாலிருந்து மறையோது மெங்கள் பரம, னதியோடு கொன்றைமாலைமுடி மேலணிந் தெனுளமே புகுந்த வதனுற் கொதியுறுகாலனங்கி நமனேடு தூதர் கொடுநோய்களான பலவு, மதிகுண நல்ல நல்ல வவை நல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே. 4

நஞ்சணிகண்டனெந்தை மடவாடனேடும் விடையேறு மெங்கள் பரமன், துஞ்சிருள் வன்னி கொன்றைமுடி மேல ணிந்தெ னுளமேபுகுந்தவதனுல், வெஞ்சின லவுணரோடு முரு மிடியுமின்னு மிகையான பூதமவையு, மஞ்சிடு நல்ல நல்ல வவை நல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே. 5

வாளவரியதளதாடை வரிகோவணத்தார் மடவாட னேடுமுடனுய், நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடிவந் தெனுளமேபுகுந்தவதனுற், கோளரி யுழுவையோடு கொலை யானை கேழல்கொடு நாகமோடு கரடி, யாளறி நல்ல நல்ல வவை நல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே. 6

செம்பிள முலைநன்மங்கை யொறுபாகமாக விடை யேறுசெல்வர் நடைவா ரொப்பிளமதியு மப்புமுடி மேலணிந் தெனுளமே புகுந்த வதனுல், வெப்பொடு குளிரும்வாத மிகையானபித்தும் வினையானவந்து நலியா, வப்படி நல்ல நல்ல வவை நல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய்தன்று விடைமேலிருந்து மடவாள னோடு முடனாய், வான்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெனுளமே புகுந்த வதனால், வேழ்கடல் சூழிலங்கையரை யன்றனோடு மிடரானவந்து நலியா, வாழ்கட நல்ல நல்ல வவை நல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனாரிபாகன் பசுவேறு மெங்கள் பரமன், சலமகளோ டெருக்கு முடிமே லணிந்தெ னுளமே புகுந்த வதனால், மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்வரு காலமான பலவு, மலைகடன்மேரு நல்ல நல்ல வவைநல்ல நல்ல வடியா ரவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடும் விசயற்குநல்ல குணமாய வேடர்கிர்தன், மத்தமு மதியுநாக முடிமே லணிந்தெனுள மேபுகுந்த வதனாற், புத்தரொடமணைவாதி லழிவிக்கு மண்ணா றிருநீறு செம்மைதிடவே, யத்தகு நல்ல நல்ல வவைநல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெ றுன்னி வளர்செம்பொ னெங்குநிகழ, நான்முகனாதியாய பிரமா புரத்து மறைஞான ஞானமுனிவன், றானுறுகோளுநாளு மடியாரைவந்து நலியாத வண்ணமுறைசெய், யானசொன் மாலையோது மடியார்கள் வானி லரசாள்வராணை நமதே.

திருச்சிற்றம்பலம்.

இப்பதிகம் பாண்டியாராஜனுடைய சுரவியாதிதீர அருளிச்செய்தது.

---

திருப்பஞ்சாக்கரம் பண் - காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந்துஞ்ச லிலாதபோழ்தினு
நெஞ்சகநைந்து நினைமினாடொறும்
வஞ்சகமற்றடி வாழ்ந்தவந்தகூ
றஞ்சவுதைத்தன வஞ்செழுத்துமே 1

மந்திரநான்மறை யாகிவானவர்
சிந்தையுணின்றவர் தம்மையாள்வன
செந்தழலோம்பிய செம்மைவேதியர்
நந்தியுன்மந்திர மஞ்செழுத்துமே. 2

ஊனிலுயிர்ப்பை யொடுக்கியொண்சுடர்
ஞானவிளக்கினை யேற்றிநன்புலத்
தேனைவழிதிறந் தேத்துவார்க்கிட
ரானகெடுப்பன வைந்தெழுத்துமே 3

நல்லவர்தீய ரெனாதுநச்சினர்
செல்லல்கெடச்சிவ முத்திகாட்டுவ
கொல்லநமன் றமர் கொண்டுபோமிடத்
தல்லல்கெடுப்பன வஞ்செழுத்துமே 4

கொங்கலர்வள்மதன் வாளியைந்தகத்
தங்குளபூதமு மஞ்சவைம்பொழிற்
றங்கர வின்பட பஞ்சுந்தம்முடை
யங்கையிலைவிர யஞ்செழுத்துமே. 5

தும்மலிருமற் றொடர்ந்தபோழ்தினும்
வெம்மைநரகம் விளைந்தபோழ்தினு
மிம்மைவினையடர்த் தெய்தும்போதினு
மம்மையினுந்துணை யஞ்செழுத்துமே. 6

வீடுபிறப்பை யறுத்துமெச்சினர்
பீடைகெடுப்பன பின்னைநாடொறு
மாடுகெடுப்ப மன்னுமாநட
மாடியுகப்பன வஞ்செழுத்துமே. 7

வண்டமரோதி மடைந்தபேணின
பண்டையிராவணன் பாடியுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்தபின்னவர்க்
கண்டமளிப்பன வஞ்செழுத்துமே 8

கார்வணனுன் முகன் காணுதற்கொணாச்
சீர்வணச்சேவடி செவ்விநாடொறும்
பேர்வணம்பேசிப் பிதற்றும்பித்தர்கட்
கார்வணமாவன வஞ்செழுத்துமே. 9

★புத்தர்சமண் கழுகையர் பொய்கொளாச்
சித்தத்தவர்க டெறிந்துதேறின
வித்தகநீறணி வார்வினைப்பகைக்
கத்திரமாவன வஞ்செழுத்துமே. 10

நற்றமிழ்ஞானசம் பந்தனுன்மறை
கற்றவன் காழியர் மன்னனுன்னிய
வற்றமின்மாலையீ ரைந்துமஞ்செழுத்
துற்றனவல்லப ரும்பராவரே. 11

திருச்சிற்றம்பலம்

---

## நமச்சிவாயத் திருப்பதிகம்

### பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
யோதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதநாம நமச்சிவாயவே 1

நம்புவார்நமலர் நாவினவிற்றினல்
வம்புநாண்மலர் வார்மதுவொப்பது
செம்பொனார்தில கம்முலகுக்கெலர
நம்பனும நமச்சிவாயவே. 2

நெக்குலார்வ மிகப்பெருகிந்நினைந்
தக்குமாலைகு டங்கையிலெண்ணுவார்
தக்கவா னவ ராத்தகுவிப்பது
நக்கனும நமச்சிவாயவே. 3

இயமன்தூதரு மஞ்சுவரின்சொலா
னயம்வந்தோதல் லார்தமைநண்ணிநு
னியமந்தானினை வார்க்கினியர்னெற்றி
நயனனும நமச்சிவாயவே. 4

---

★தலை யிடறச்செய்தது இப்பத்தாவது திருச்செய்யுள்

கொல்வாரேனுங் குணம்பலநன்மைக
ளில்லாரேனு மியம்புவராயிடி
னெல்லாத்தீங்கையு நீக்குவரென்பரா
னல்லார்நாம நமச்சிவாயவே. 5

மந்தரம்மன பாவங்கண்மேவிய
பந்தனையவர் தாமும்பகர்வரேற்
சிந்தும்வல்வினை செல்வமுமல்குமா
னந்திநாம நமச்சிவாயவே. 6

நகரமேழ்புக நாடினராயினு
முரைசெய்வாயின ராயினுருத்திரர்
விரவியேபுகு வித்திடுமென்பரால்
வரதனுமை நமச்சிவாயவே. 7

இலங்கைமன்ன னெடுத்த வடுக்கன்மேற்
றறங்கொள் கால்விரல் சங்கரனூன்றலு
மலங்கிவாய்மொழி செய்தவனுய்வகை
நலங்கொளுமை நமச்சிவாயவே 8

போதன்போதன் கண்ணனும்மண்ணறன்
பாதந்தான்முடி நேடியபண்பரா
யாதுங்காண்பரி தாகியலந்தவ
ரோதுநாம நமச்சிவாயவே. 9

கஞ்சிமண்டையர் கையினுண்கையர்கள்
வெஞ்சொன்மிண்டர் விரவிலரென்பரால்
விஞ்சையண்டர்கள் வேண்டவமுதுசெய்
நஞ்சுள்கண்ட நமச்சிவாயவே. 10

நந்திநாம நமச்சிவாயவெனுஞ்
சந்தையாற்றமிழ் ஞானசம்பந்தன்சொற்
சிந்தையான்மகிழ்ந் தேத்தவல்லாரெல்லாம்
பந்தபாச மறுக்கவல்லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

## திருமயிலாப்பூர் பூம்பாவைத் திருப்பதிகம்

பண்-சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

மட்டிட்டபுன்னையங் கானல்மட மயிலைக்
கட்டிட்டங்கொண்டான் கபாலீச்சரமமர்ந்தா
னொட்டிட்டபண்பி னுருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டல்காணாதே போதியோபூம்பாவாய். 1

மைப்பயந்தவொண்கண் மடநல்லார்மாமயிலைக்
கைப்பயந்தநீற்றான் கபாலீச்சரமமர்ந்தா
னைப்பசியோண விழாவு மருந்தவர்கள்
துய்ப்பனவுங்காணாதே போதியோபூம்பாவாய். 2

வளைக்கைமடநல்லார் மாமயிலைவண்மறுகிற்
றுளக்கில்கபாலீச்சரத்தான் தொல்கார்த்திகைநாட்
டளத்தேந்திளமுலையார் தையலார்கொண்டாடும்
விளக்கீடுகாணாதே போதியோபூம்பாவாய். 3

ஊர்திரைவேலையுலாவு முயர்மயிலைக்
கூர்தருவேல்வல்லார் கொற்றங்கொள்சேரிதனிற்
கார்தருசோலைக் கபாலீச்சரமமர்ந்தா
னார்திரைநாள்காணாதே போதியோபூம்பாவாய். 4

மைப்பூசமொண்கண்மட நல்லார்மாமயிலைக்
கைப்பூசுநீற்றான் கபாலீச்சரமமர்ந்தா
னெய்ப்பூசிமொண்புழுக்கல் னேரிழையார்கொண்டாடுந்
தைப்பூசங்காணாதே போதியோ பூம்பாவாய். 5

மடலார்ந்ததெங்கின் மயிலையார்மாசிக்
கடலாட்டுக்கண்டான் கபாலீச்சரமமர்ந்தா
னடலானேறூருமடிகளடிபரவி
நடமாடல்காணாதே போதியோபூம்பாவாய். 6

மலிவிழா வீதிமடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக்கண்டான் கபாலீச்சரமமர்ந்தான்
பலிவிழாப்பாடல்செய் பங்குனிஉத்திரநா
ளொலிவிழாக்காணுதே போதியோ பூம்பாவாய் 7

தண்ணுஅரக்கன்தோள்சாய்த்துகந்ததானினுன்
கண்ணுர்மயிலைக் கபாலீச்சரமமர்ந்தான்
பண்ணுர்பதினெண்கணங்கள் அட்டமிநாள்
கண்ணுரக்காணுதே போதியோபூம்பாவாய். 8

நற்றுமரைமலர்மேல் நான்முகனும்நாரணனு
மூற்றுங்குணர்கிலா மூர்த்திதிருவடியைக்
கற்றுர்களேத்துங் கபாலீச்சரமமர்ந்தான்
பொற்றுப்புக்காணுதே போதியோ பூம்பாவாய். 9

உறிஞ்சாயவாழ்க்கை அமனுடையைப்போர்க்கு
மிருஞ்சாக்கியர் ளெடுத்துரைப்பநாட்டில்
கருஞ்சோலைசூழ்ந்த கபாலீச்சரமமர்ந்தான்
பெருஞ்சாதிக்காணுதே போதியோ பூம்பாவாய். 10

கானமர்சோலைக் கபாலீச்சரமமர்ந்தான்
தேனமர்பூம் பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞான சம்பந்த னலம்புகழ்ந் தபத்தும்வலார்
வானசம்பந்தவ ரோடும்வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

இது எலும்பு பெண்ணுக வோதியருளிய பதிகம்

சுவாமிபெயர் - கபாலீசுவரர்,

தேவியார் - கற்பகவல்லியம்மை

திருஞானசம்பந்த சுவாமிகள் திருவடிகளே சரணம்.

——

சிவமயம்

திருநாவுக்கரசு சுவாமிகள் செய்தருளிய

# தேவாரப் பதிகங்கள்

——:——

## திரு அங்கமாலை - பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

தலையேநீ வணங்காய் தலை
மாலைதலைக் கணிந்து
தலையாலேபலி தேருந்தலைவனைத்
தலையேநீ வணங்காய். 1

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன் றன்னை
யெண்டோள் வீசி நின்றுடுபிரான் றன்னைக்
கண்காள் காண்மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ - சிவ
னெம்மிறை செம்பவள
எரிபோல்மேனிப் பிரான் றிறமெப்போதுஞ்
செவிகாள் கேண்மிண்களோ. 3

மூக்கேநீ முரலாய் முது
காடுறை முக்கணனை
வாக்கேநோக்கிய மங்கைமணாளனை
மூக்கேநீ முரலாய். 4

வாயே வாழ்த்து கண்டாய் - மத
யானையுரி போர்த்துப்
பேய்வாழ்காட்டகத் தாடும்பிரான்றன்னை
வாயேவாழ்த்து கண்டாய். 5

நெஞ்சேநீ நினையாய் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சாடும்மலை மங்கைமணாளனை
நெஞ்சேநீ நினையாய். 6

கைகாள் கூப்பித் தொழீர்—கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப்பாம்பரை யார்த்தபரமனை
கைகாள் கூப்பித் தொழீர் 7

ஆக்கை யாற்பயனேன்—அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையாலடிப் போற்றியென்னுதவிவ்
வாக்கையாற் பயனென். 8

கால்களாற் பயனென்-கறைக்
கண்டனுறை கோயில்
கோலக்கோபுரக் கோகரணஞ்சூழாக்
கால்களாற் பயனென். 9

உற்றுரா ருளரோ-வுயிர்
கொண்டுபோம் பொழுது
குற்றுலத்துறைகூத்த னல்லானமக்
குற்றுரா ருளரோ. 10

இருமாந் திருப்பன் கொலோ-வீசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிகீழ்சென்றங்
கிறுமாந் திருப்பன்கொலோ 11

தேடிக் கண்டுகொண்டேன்-திரு
மாலொடு நான்முகனுந்
தேடித்தேடொணுத் தேவனையென்னுள்ளே
தேடிக்கண்டு கொண்டேன்.

திருச்சிற்றம்பலம்

---

கோயிற்றிருநேரிசை-பண்-கொல்லி
திருச்சிற்றம்பலம்

பத்தனுய்பாடமாட்டேன் பரமனே பரமயோகி
எத்தனுற்பத்திசெய்தே னென்னை நீயிகழவேண்டாம்

முத்தனே முதல்வா தில்லை யம்பலத்தாடுகின்ற
அத்தாவுன்னுடல்காண்பா னடியனேன்வந்தவாறே.

கருத்தனாய்ப்பாடமாட்டேன் காம்பனதோளிபங்கா
வொருத்தராலறிய வொண்ணாத்திருவுருவுடையசோதீ
திருத்தமாந்தில்லை தன்னுட் டிகழ்ந்தசிற்றம்பலத்தே
நிருத்தநான்காணவேண்டி நேர்படவந்தவாறே.

கேட்டிலேன்கிளைபிரியேன் கேட்குமாகேட்டியாகில்
நாட்டினேனின்றபாத நடுப்படநெஞ்சினுள்ளே
மாட்டினீர்வாளைபாயு மல்குசிற்றம்பலத்தே
கூட்டமாங்குவிமுலையாள் கூடநீயாடுமாறே.

சிந்தையைத்திகைப்பியாதே செறிவுடையடிமைசெய்ய
எந்தைநீயருளிச்செய்யா யாதுநான்செய்வதென்ன
செந்தீயார் வேள்வியோவாத் தில்லைசிற்றம்பலத்தே
அந்தியும்பகலுமாட வடியிணையலசுங்கொல்லோ.

கண்டவாதிரிந்துநாளுங் கருத்தினால் நின்றபாதங்
கொண்டிருந்தாடிப்பாடிக் கூடுவன்குறிப்பினாலே
வண்டுபண்பாடுஞ்சோலை மல்குசிற்றம்பலத்தே
யெண்டிசையோருமேத்த யிறைவாநீயாடுமாறே.

பார்த்திருந்தடியேனுன் பாவலன்பாடியாடி
மூர்த்தியேயென்பனுன்னை மூவரில்முதல்வனென்பன்
ஏத்துவாரிடர்கடீப்பாய் தில்லைசிற்றம்பலத்துக்
கூத்தாவுன் கூத்துக்காண்பான் கூடநான்வந்தவாறே

பொய்வினைத்தவிரவிட்டுப் புறமலாவடிமைசெய்ய
ஐயநீயருளிச்செய்யா யாதியேயாதிமூர்த்தி
வையகந்தன்னில்மிக்க மல்குசிற்றம்பலத்தே
பையநின்னுடல்காண்பான் பரமநான்வந்தவாறே.

மனத்தினுற்றிகைத்துநாளு மான்பலாநெறிகண்மேலே
கனைப்பராலென்செய்கேனோ கறையணிகண்டத்தானே
தினைத்தனைவேதங்குன்றாத் தில்லைச்சிற்றம்பலத்தே
யனைத்துநின்னிலயங்காண்பா யடியனேன்வந்தவாறே.

நெஞ்சினைத்தூய்மைசெய்து நினைக்குமா நினைப்பியாதே
வஞ்சமேசெய்தியாலோ வானவர்தலைவனே நீ
மஞ்சடைசோலைத்தில்லை மல்குசிற்றம்பலத்தே
அஞ்சொலாள்காண நின்று வழகநீ ஆடுமாறே. 9

மண்ணுண்டமாலவனு மலர்மிசைமன்னினானும்
விண்ணுண்டதிருவுருவம் விரும்பினார் காணமாட்டார்
திண்ணுண்டதிருவேமிக்க தில்லைச்சிற்றம்பலத்தே
பண்ணுண்டபாடலோடும் பரமநீயாடுமாறே. 10

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-திருமூலநாயனார் சபாநாதர்,
தேவியார்-உமாதேவியார், சிவகாமியம்மை.

---

## நமச்சிவாயப் பதிகம்-பண்-காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே. 1

பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை
ஆவினுக்கருங்கல மரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங் கோட்டமில்லது
நாவினுக்கருங்கல நமச்சிவாயவே 2

விண்ணுறவடுக்கிய விறகின்வெவ்வழ
லுண்ணியபுகிலவை ஒன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற் பயின்றபாவத்தை
நண்ணின்றறுப்பது நமச்சிவாயவே. 3

இடுக்கண்பட்டிருக்கினு மிரந்தியாரையும்
விடுக்கிற்பிரானென்று வினவுவோமல்லோம்
அடுக்கற்கீழ்கடக்கினு மருளினுமுற்ற
நடுக்கத்தைக்கெடுப்பது நமச்சிவாயவே. 4

வெந்தநீறருங்கலம் விரதிகட்கெலா
மந்தணர்க்கருங்கல மருமறையாரங்கந்
திங்களுக்கருங்கலந் திகழுநீண்முடி
நங்களுக்கருங்கல நமச்சிவாயவே. 5

சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கல்லா
நலமிலனாடொறு நல்குவானவன்
குலமிலராகினுங் குலத்திற்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பது நமச்சிவாயவே 6

வீடினாருலகில் விழுமியதொண்டர்
கூடினாரந்நெறி கூடச்சென்றது
மோடினேனோடிச்சென் றுருவங்காண்டது
நாடினேனாடிற்று நமச்சிவாயவே 7

இல்லகவிளக்கது விருள்கெடுப்பது
சொல்லகவிளக்கது சோதியுள்ளது
பல்லகவிளக்கது பலருங்காண்பது
நல்லகவிளக்கது நமச்சிவாயவே. 8

முன்னெறியாகிய முதல்வன்முக்கணன்
தன்னெறியேசர ணாதல்திண்ணமே
யந்நெறியேசென்றங் கடைந்தவர்க்கெலாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே. 9

மாப்பிணை தழுவிய மாதோர்பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவிய நமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக் கிடுக்கணில்லையே. 10

திருச்சிற்றம்பலம்

**இது சமணர்கள் கற்றூணிற்கட்டி கடலிலே**
**வீழ்த்தினபோது ஓதி அருளியது.**

## திருவண்ணாமலை - திருநேரிசை

### பண் - கொல்லி

ஓதிமாமலர்கள் தூவியிமை யவள்பங்காமிக்க
சோதியேதுல-குமெண்டோட சுடர்மழுப்படையினானே
ஆதியேஅமரர்கோவே அணியண்ணாமலையுளானே
நீதியானின்னையல்லா னினையுமா நினைவிலேனே. 1

பண்டனைவென்றவின்சொற் பாவையோர்பங்கநீல
கண்டனே கார்கொள்கொன்றைக் கடவுளேகமலபாதா
அண்டனே அமரர்கோவே அணியண்ணாமலையுளானே
தொண்டனே னுன்னை அல்லாற் சொல்லுமாசொல்லிலேனே 2

உருவமுமுயிருமாகி ஓதியவுலகுக்கெல்லாம்
பெருவினைபிறப்புவீடாய் நின்றவெம்பெருமான்மிக்க
அருவிபொன்சொரியுமண்ணா மலையுளாயண்டர்கோவே
மருவி நின்பாதமல்லான் மற்றொருமாடிலேனே. 3

பைம்பொனேபவளக்குன்றே பரமனேபால்வெண்ணீற்றாய்
செம்பொனேமலர்செய்பாதா சீர்தருமணியேமிக்க
அம்பொனே கொழித்து வீழு மணியண்ணாமலையுளானே
என்பொனேயுன்னையல்லா லேதுநானினைவிலேனே. 4

பிறையணிமுடியினானே பிஞ்ஞகாபெண்ணோர்பாகா
மறைவலாவிறைவாமண்டோர் கொன்றையாய்லாமதேவர்
வறைகழலமரரேத்து மணியண்ணாமலையுளானே
இறைவனேயுன்னையல்லா லியாதுநானினை விலேனே. 5

புரிசடைமுடியின்மேலோர் பொருபினற்கங்கைவைத்துக்
கரியுரிபோர்வையாகக் கருதியகாலகாலா
அரிகுலமலிந்தவண்ணா மலையுளாயலரின்மிக்க
வரிமிகுவண்டுபண்செய் பாதநான்மறப்பிலேனே. 6

இரவியுமதியும்விண்ணு மிருநிலம்புலனுங்காற்று
முரகமார்புவனமெட்டுந் திசைஒளியுருவமானாய்
அரவுமிழ்மணிகொள்சோதி யணியண்ணாமலையுளானே
பரவுநின்பா தமல்லாற் பரமநான்பற்றிலேனே. 7

பார்த்தனுக்கன்றுநல்கிப் பாசுபதத்தையீந்தாய்
நீர்த்ததும்புலாவுகங்கை நெடுமுடிநிலாவவைத்தா
யார்த்துவந்நீண்டுகொண்ட மணியண்ணமலையுளானே
தீர்த்தனே நின்றன்பாதத் திறமலாற்றிறமிலனே. 8

பாலுநெய்முதலாமிக்க பசுவிலைந்தாடுவானே
பாலுநான் முகனுங்கூடிக்காண்கிலாவகையுணின்றாய்
ஆலுநீர்கொண்டல்பூக மணியண்ணமலையுளானே
வாலுடைவியாயுன்றன் மலரடிமறப்பிலேனே. 9

இரக்கமொன்றியாதுமிலாக் காலனைக்கடிந்துவெம்மா
னுரத்தினல்வரையையூக்க வொருவிரனூதியினாலே
அரக்கனை நெரித்தவண்ணா மலையுளாயமரரேறே
சிரத்தினல்வணங்கிஏத்தித் திருவடிமறப்பிலேனே 10

திருச்சிற்றம்பலம்

இது நடுநாட்டிலுள்ளது

சுவாமி பெயர் - அருணசலேசுவரர்

தேவியார் - உண்ணமுலையம்மை

---

## கோயில் - பெரிய திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

அரியானை அந்தணர்தம் சிந்தையானை அருமறையி னகத்தானை அணுவையார்க்குந் தெரியாத தத்துவனைத் தேனைப்பாலைத் திகழொளியைத் தேவர்கடங் கோனை மற்றைக், கரியானை நான்முகனைக் கனலைக்காற்றைக், கனைக் கடலைக் குலவரையைக் கலந்துநின்ற, பெரியானைப் பெரும் மற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம்பிறவாநாளே. 1

கற்றானைக் கங்கைவளர் சடையான்றனைக் காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதினானை, அற்றார்க்கு மலந்தார்க்கு மருள் செய்வானை யாரும் புகுவானை அறிந்தோமன்றே, மற்றாருந் தன்னொப்பா ரில்லாதானை வானவர்க ளெப்பொழுதும் வணங்கிஏத்தப், பெற்றானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 2

கருமானினுரியதனை யுடையாயாக்கிக் கனைகழல்கள் கலந்தொலிப்பவனல் கையேந்தி வருமானத் திரடோள்கள் மட்டித்தாட வளர்மதியுஞ் சடைக்கணிந்து மானேர் நோக்கி அருமான வாண்முகத்தா ளமர்ந்துகாண வமரர் கண முடி வணங்க வாடுகின்ற, பெருமானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 3

அருந்தவர்க டொழுதேத்து மப்பன்றன்னை யமரர் கடம் பெருமானை யரனைமூவா, மருந்தமரர்க் கருள்புரிந்த மைந் தன் றன்னை மறிகடலுங் குலவரையும் மண்ணும் விண்ணும், திருந்தொளிய தாரகையுந் திசைகளெட்டுந் திரிசுடர்களோ ரிரண்டும் பிறவுமாய பெருந்தகையைப் பெரும்பற்றப் புலி யூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 4

அருந்துணையை யடியார்த மல்லறீர்க்கு மருமருந்தை அகன்ஞாலத் தகத்துட்டோன்றி, வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும்விட்டு வான்புலன்க ளகத்தடக்கி மடவாரோடும், பொருந்தணைமேல் வரும்பயனைப் போகமாற்றிப் பொது நீக்கித் தனைநினைய வல்லோர்க்கென்றும், பெருந் துணை யைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே 5

கரும்பமரு மொழிமடவாள் பங்கன்றன்னைக் கனவயிரக் குன்றனையக் காட்சியானை, அரும்பமரும் பூங்கொன்றைத் தாரான்றன்னை அருமறையோ டாறங்கமாயினானைச், சுரும்ப மருங் கடிபொழில்கள் சூழதென்னூரூர்ச் சுடர் கொழுந்தைத் துளக்கிலா விளக்கைமிக்கை, பெரும்பொருளைப் பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 6

வரும்பயனை எழுநரம்பி னோசையானை வரைசிலைய வானவர்கள் முயன்றவாளி யாரும்பயஞ்செயவுணர் பாமெரி யக்கோத்த வம்மானை அலைகடனஞ் சயின்றான்றன்னைச் சுரும்பமருங் குழன்மடவார் கடைக்கணோக்கிற் றுளங்காத சிந்தையராய்த் துறந்தோருள்ளப் பெரும்பயனைப் பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 7

காரானை யீருரிவைப் போர்வையானைக் காமருபூங்கச் சியே கம்பன்றன்னை, ஆறேனு மடியவர்கட்கணி யான் றன்னை அமரர்களுக்கறிவரிய வளவிலானை, பாரோரும் விண் ணோரும் மணியநட்டம்பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனை எண்ணிப், பேரானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 8

முற்றாத பான்மதியஞ் சூடினானை மூவுலகுந்தானாய முதல் வன் றன்னைச், செற்றார்கள் புரமூன்றுஞ் சென்றான் றன்னைத் திகழொளியை மரகதத்துத், தேனைப் பாலைக் குற்றாலத் தமர்ந் துறையுங் குழகன்றன்னைக் கூத்தாட வல்லயனைக் கோனை ஞானம் பெற்றானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 9

காரொளிய திருமேனிச் செங்கண்மாலுங் கடிக்கமலத் திருந்தவனுங் காணாவண்ணஞ், சீரொளிய தழற்பிழம்பாய் நின்றதொல்லைத் திகழொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்குமேரொளியை இருநிலனும் விசும்பும்விண்ணு மேழுல குங் கடந்தண்டத் தப்பால்நின்ற பேரொளியைப் பெரும்பற் றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 10

திருச்சிற்றம்பலம்

---

## திரு ஆவடுதுறை - திருத்தாண்டகம்

### திருச்சிற்றம்பலம்

திருவேயென் செல்வமே தேனேவானோர் செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க உருவே என்னுறவே என்னூனே யூனி னுள்ளமே யுள்ளத்தினுள்ளே நின்ற கருவேஎன் கற்பகமே கண்ணே கண்ணிற்கருமணியே மணியாடுபாவாய் காவா, யருவாய வல்வினைநோ யடையாவண்ண மாவடுதண் டுறையுறையு மமரரேறே. 1

சிலைத்தார் திரிபுரங்க டியில்வேவச்சிலைதனை வித்து மையவனை யஞ்சநோக்கிக், கலித்தாங் கிரும்பிடிமேற் கை வைத்தோடுங் களிறுரித்த கங்காளா வெங்கள் கோவே நிலத்தாரவர்தமக்கே பொறையாய்நாளு நில்லாவுயி ரோம்புநீ தானே நான், அலுத்தேனடியேனை யஞ்சலென்று யாவடுதண்டுறையுறையு மமரரேறே 2

துறந்தார்தந் தூநெறிகட் சென்றேல்லேன்றுனை மாலை சூட்டநான் றூயேநல்லேன், பிறந்தேனின் றிருவருளே பேசி னல்லாற் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே செறிந்தாற் மதிவிலங்கைக் கோமான் தன்னைச் செறுவரைக் கீழ் அடர்த் தருளிச் செய்கையெல்லா மறிந்தே னடிலேனை யஞ்சே லென்று யாவடுதண் டுறையுறையு மமரரேறே. 3

திருச்சிற்றம்பலம்

சுவாமி பெயர் - மாசிலாமணித்தியாகேசுவரர்

தேவியார் - ஒப்பிலாமுலையம்மை

---

## திருவானைக்கா - திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

எத்தாய ரெத்தந்தை யெச்சுற்றத்தா ரெம்மாடு சும் மாடாமேவர் நல்லார், செத்தால்வந் துதவுவாரொருவ ரில்லைச் சிறுவிறகாற் றீமூட்டிச் செல்லாநிற்பர், சித்தாய வேடத்தாய் நீடுபொன்னித் திருவானைக்காவுடைய செல்வா வென்ற, னத்தாவுன் பொற்பாத மடையப்பெற்று லல்ல கண்டங் கொண்டடியேனென் செய்கேனே. 1

ஊனாகி யுலராகி யதனுணின்ற வுணர்வாகிப் பிற வனைத்து நீயாய்நின்றாய், நானேது மறியாமே யென்னுள்

வந்து நல்லனவுந் தீயனவுங் காட்டநின்ருய் தேனுருங் கொன்றையனே நின்றியூராய் திருவானைக் காவிலுறை சிவனேஞான, மாறுயுன் பொற்பாத மடையப் பெற்ரு லல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே. 2

உரையாரும் புகழானே யொற்றியூரா கச்சியேகம்பனே காரோணத்தாய், விரயாகு மலர்தூவி வணங்குவார் பான் மிக்கானே யக்கரவ மாராய்யூண்டாய், திரையாரும் புனற் பொன்னித் தீர்த்தமல்கு திருவானைக் காவிலுறை தேனே வானே, ரரையாவுன் பொற்பாத மடையப் பெற்ரு லல்ல கண்டங் கொண்டடியே னென்செய்கேனே. 3

கொடியேயும் வெள்ளேற்றும் கூளியாடக் குறட்பூதங் கூத்தாட நீயுமாடி, வடிவேயு மங்கைதனை வைத்தமைந்தா மதிலானைக் காவிளாய் மாகாளத்தமாய், படியேயுங் கட லிலங்கைக் கோமான்றன்னைப் பருமுடியுந் திரளோடு மடர்த் துகந்த, அடியேவந் தடைந்தடிமை யாகப்பெற்ரு லல்ல கண்டங் கொண்டடியே னென்செய்கேனே. 4

திருச்சிற்றம்பலம்

சுவாமி பெயர் - ஜம்புகேசுவரர்

தேவியார் - அகிலாண்டவல்லியம்மை

---

# தனித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

அப்பநீ யம்மைநீ யையனுநீ யன்புடையமாமனு மாமியு நீ, யொப்புடைய மாதரு மொண்பொருளும் நீ யொருகுலமுஞ் சுற்றமு மோரூருநீ, துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய் நீ, துணையாயென் னெஞ்சந் துறப்பிப்பாய் நீ, யிப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்துநீ யிறைவநீ யேறூர்ந்த செல்வநீயே. 1

திருக்கோயிலில்லாத திருவிலூறுந் திருவெண்ணீறணி யாத திருவிலூறும், பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும்

பாங்கினொடு பலதளிக ளில்லாவூரும் விருப்போடு வெண்சங்க மூதாவூரும் விதானமும் வெண்கொடியு மில்லாவூரும் அருப்போடு மலர்பறித்திட் டுண்ணாவூரு மவையெல்லா மூரல்ல வடவிகாடே. 2

திருநாம மஞ்செழுத்துஞ் செப்பாராகிற் றீவண்ணர் திருமொருகாற் பேசாராகி, லொருகாலுந் திருக்கோயில் சூழாராகி லுண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகி லருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகி லளியற்றார் பிறந்தவா றேதோவென்னிற், பெருநோய்கண் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக் கின்றாரே. 3

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல் லேன் குற்றமே பெரிதுடையேன் கோலமாய நலம் பொல்லே னான்பொல்லேன், ஞானியல்லே னல்லாரோ டிசைந்திலே னடுவேநின்ற, விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தே னல்லேன், வெறுப்பனவு மிகப்பெரிதும் பேசவல்லேன் இலம் பொல்லே னிரப்பதே யீயமாட்டே னென்செய்கேன் றோன்றினே னேழையேனே. 4

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து தரணியொடு வானளத் தருவரேனு, மங்குவாரவர்செல்வ மதிப்போ மல்லோ மாதேவர்க் கேகாந்த ரல்லாராகில், அங்கமெல்லாங் குறைந்தழுகு தொழுநோயரா யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி லவர் கண்டீர் யாம் வணங்குங் கடவுளாரே. 5

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் திருவடிகளே சரணம்

—

சிவமயம்

சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த

# தேவாரப் பதிகங்கள்

——!——

## திருவெண்ணெய் நல்லூர் - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறைசூடி பெருமானே யருளாளா
வெத்தான்மறவாதே நினைக்கின்றேன்மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
ளத்தாவுனக்காளாயினி யல்லேனெனலாமே. [டுறையு

நாயேன்பலநாளு நினைப் பின்றிமனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த் தேன்பர லாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூரருட்
ளாயாவுனக்காளாயினி யல்லேனெனலாமே [டுறையு

மன்னேமறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னைப்
பொன்னே மணிதானேவயி ரம்மேபொருதுந்தி
மின்னார்பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூரருட்
ளன்னேவுனக்காளாயினி யல்லேனெனலாமே. [டுறையு

முடியேனினிப்பிறவேன்பெறின் மூவேன்பெற்றமூர்த்தி
கொடியேன்பலபொய்யேயுரைப் பேனைக்குறிக்கொண்ணீ
செடியார்பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூரருட்
ளடிகேளுனக்காளாயினி யல்லேனெனலாமே. [டுறையு

பாதம்பணிவார்கள்பெறும் பண்டமதுபணியா
யாதன்பொருளானே னறிவில்லேனருளாளா
தாதார்பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூரருட்
டாதீயுனக்காளாயினி யல்லேனெனலாமே [டுறையு

தண்ணார்மதிசூடி தழல்போனுந்திருமேனி
எண்ணார்புரமூன்று மெரியுண்ண நகைசெய்தாய்
மண்ணார்பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூரருட
டண்ணாவுனக்காளாயினி யல்லேனெனலாமே [டுறையு

ஊனாயுயிரானாயுட லானாயுலகானாய்
வானாய்நிலனானாய்கட லானாய்மலையானாய்
தேனார்பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூரருட்
ளானாயுனக்காளாயினி யல்லேனெனலாமே. [டுறையு

ஏற்றார்புரமூன்றுமெரி யுண்ணச்சிலைதொட்டாய்
தேற்றாதனசொல்லித்திரிவேனோ செக்கர்வானீ
ரேற்றாய்பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூரருட
ளாற்றாயுனக்காளாயினி யல்லேனெனலாமே. [டுறையு

மழுவாள் வலனேந்தீமறை யோதீமங்கைபங்கா
தொழுவாரவர்துயராயின தீர்த்தலுன் தொழிலே
செழுவார்பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூரருட்
ளழகாவுனக்காளாயினி யல்லேனெனலாமே [டுறையு

காரூர்புன லெய்திக்கரை கல்வித்திரைக்கையாற்
பாரூர்புகழெய்தித்திகழ் பன்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
பாரூரனெம்பெருமாற்கா யல்லேனெனலாமே

திருச்சிற்றம்பலம்.

**சுவாமிபெயர் - தடுத்தாட்கொண்ட வீசுரர்**

**தேவியார் - தேற்கண்மங்கையம்மை**

---

## திருத்தொண்டத்தொகை

**பண் - கொல்லக்கௌவர்ணம்**

**திருச்சிற்றம்பலம்**

தில்லைவாழ் ழந்தணர்த மடியார்க்குமடியேன் திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன். இல்லையே யென்னாத வியற்பகைக்கு மடியேன், இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன் வெல்லுமாமிக வல்லமெய்ப் பொருளுக் கடியேன் விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியே, னல்லிமேன் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன் ஆரூரன் ஆரூரிலம்மானுக் காளே. 1

இலைமலிந்த வேநம்பி யெறிபத்தர்க் கடியேன் ஏனாதி நாதன்ற னடியார்க்குமடியேன் கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன் கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன், மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ்சாற னெஞ்சாதவாட்டாய னடியார்க்குமடியேன், அலைமலிந்த புனல் மங்கை யானார்க்கடியேன் ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 2

*மும்மையா லுலகாண்ட மூர்த்திக்குமடியேன் முருக னுக்கும் உருத்திரபசுபதிக்கு மடியேன், செம்மையே திருநாளைப் போவார்க்குமடியேன், திருக்குறிப்புத் தொண்டர்த மடியார்க்குமடியேன், மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினாலெறிந்த, அம்மையா னடிச் சண்டிப் பெருமானுக் கடியேன் ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன் பெரு நம்பி குலச்சிறைதன் னடியார்க்கு மடியேன் பெரு மிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கு மடியே னொரு நம்பி யப்பூதி யடியார்க்கு மடியே னொலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க்கடியே, னருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியேன் ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 4

வம்பறு வரிவண்டு மணநாற மலரு மதுமலர்நற் கொன்றையா னடியலாற்பேணா எம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன், ஏயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்நம்பிரான் திருமூல னடியார்க்கு மடியேன் 0 நாட்டமிகு

---

* விபூதி, ருத்ராக்ஷம், சடைமுடி இவைகளுடன் அரசு செய்தமையால் மும்மையா லுலகாண்ட மூர்த்தியென்றது.

0 பிறவியந்தகராயிருந்து திருவாரூர் கமலாலய தீர்த்தத்தில் மூழ்கி யெழுந்திருக்கும்போது, சுவாமியினுடைய திருவருளால் நாட்டம் விளங்கப் பெற்றவரென்பது தோற்ற நாட்டமிகு தண்டிக்கும் என்றருளிச் செய்தது.

தண்டிக்கு மூர்க்கர்க்கு மடியேன், அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியேன் ஆரூரன் ஆரூரிலம்மானுக் காளே. 5

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே மற வாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன், சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன் செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன் கார்கொண்ட கொடைக் கழறிற் றறிவார்க்கு மடியேன், கடற்காழிக் கணநாத னடி யார்க்கு மடியேனார்கொண்ட வேற்கூற்றன் களந்தைக் கோனடியேன் ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 6

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன் பொழிற் கருவூர்த்துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன், மெய்யடியானர சிங்க முனையரையர்க் கடியேன் விரிதிரைசூழ் கடனாகையதி பத்தர்க்கடியேன் கைதடிந்த வரிசிலையாண் கலிக்கம்பன்கலி யன் கழற் 0 சத்திவரிஞ்சையர்க்கோ னடியார்க்கு மடியேன் ஐயடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியேன், ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே 7

கறைகண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த கணம் புல்ல நம்பிக்குங் காரிக்குமடியே, னிறைகொண்ட சிந்தை யானெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடி யேன், துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித் தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன், னறைக் கொண்ட வேநம்பி முனையடுவார்க் கடியேன் ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 8

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான் காட வர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன், மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை மன்னவனாஞ் செருத்

---

*கழறிற்றறிவாரார் - சேரமானாயனார்

0 சத்திவரிஞ்சையர்கோன் என்பதை - வரிஞ்சையூர்ச் சத்தியாரென மாற்றுக.

நூணைத னடியார்க்குமடியேன், புலியதன்மே லரவாடவாடி பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியேன், அடல்சூழ்ந்த வேநம்பி கோட்புலிக்கு மடியேன் ஆரூரன் ஆரூரி லம்மானுக்காளே. 9

பத்தராய்ப் பணிவார்களெல்லார்க்கு மடியேன் பரம னையே பாடுவா ரடியார்க்கு மடியேன் சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார்க்கு மடியேன் திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன், முப்போதுந் திருமேனி தீண்டு வார்க் கடியேன் முழுநீறுபூசிய முனிவர்க்கு மடியேன், அப் பாலு மடிச்சார்ந்தா ரடியார்க்கு மடியேன் ஆரூரன் ஆரூரி லம்மானுக்காளே. 10

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்வரிவளையான் மானிக்கு நேசனுக்கு மடியேன், தென்னவனு யுலகாண்ட செங்கணார்க்கடியேன் திருநீலகண்டத்துப் பாணனார்க்கடியே னென்னவனு மரனடியேயடைந்திட்ட சடைய னிசைஞானி காதலன் திருநாவலூர்க்கோ, னன்னவனு மாரூர னடிமை கேட்டுவப்ப ராரூரி லம்மானுக் கன்பராவாரே 11

## திருச்சிற்றம்பலம்

இது சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூர்ப் பரவை நாச்சியார் திருமாளிகையி லிருந்து வீதிவிடங்கப் பெரு மானைத் தரிசிக்கும் பொருட்டு ஆலயத்திற்கு ளெழுந்தரு ளும்போது தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருக்குஞ் சிவ னடியார்களை யுள்ளத்தால் வணங்கி இவர்களுக்கு நானடியே னாகும்படி பரமசிவம் எந்நாள் கிருபைசெய்யுமென்று சொல்லு கையில் சிவபெருமான் எதிரில் தரிசனங் கொடுத்தருளித் ''தில்லைவாளந்தனர் தம் அடியார்க்கும் அடியே'' னென்று முதலடியெடுத்துக் கொடுக்கப் பாடித் துதிசெய்த பதிகம்.

———

## திருமழபாடி - பண் - நட்டராகம்

### திருச்சிற்றம்பலம்

பொன்னார்மேனியனே புலித்தோலையரைக்கிசைத்து
மின்னார்செஞ்சடைமேல் மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியே மழபாடியுள்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லா லினியாரை நினைக்கேனே. 1

கீளார்கோவணமுந் திருநீறுமெய்ப்பூசியுன்றன்
றாளேவந்தடைந்தேன் றலைவாவெனையென்றுகோணீ
வாளார்கண்ணிபங்கா மழபாடியுள்மாணிக்கமே
யாளாநின்னையல்லா லினியாரை நினைக்கேனே. 2

எம்மானெம்மனையென் றெனக்கெட்டனையச்சார்வாகா
ரிம்மாயப்பிறவிபிறந்தே யிறந்தெய்த்தொழிந்தேன்
மைம்மாம்பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
யெம்மானின்னையல்லா லினியாரை நினைக்கேனே. 3

பண்டேநின்னடியே னடியாரடியார்கட்கெல்லாம்
தொண்டேபூண்டொழிந்தேன் றொடராமைத்துரிசறுத்தேன்
வண்டார்பூப்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
யண்டாநின்னையல்லா லினியாரை நினைக்கேனே. 4

கண்ணாயேழுலகுங் கருத்தாயவருத்தமுமாய்
பண்ணாரின்றமிழாய்ப் பரமாயபரஞ்சுடரே
மண்ணார்பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
யண்டாநின்னையல்லா லினியாரை நினைக்கேனே 5

நாளார்வந்தணுகி நலியாமுன் நின்றனக்கே
யாளாவந்தடைந்தே னடியேனையுமென்றுகோணீ
மாளாநாளருளு மழபாடியுள் மாணிக்கமே
யாளாநின்னையல்லா லினியாரை நினைக்கேனே. 6

சந்தாருங்குழையாய் சடைமேற்பிறைதாங்கிநல்ல
வெந்தார்வெண்பொடியாய் விடையேறியவித்தகனே
மைந்தார்சோலைகள்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
யெந்தாய்நின்னையல்லா லினியாரை நினைக்கேனே. 7

வெய்யவிரிசுடரோன் மிகுதேவர்கணங்களெல்லாஞ்
செய்யமலர்களிட மிகுசெம்மையுள் நின்றவனே
மையார்பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
யையாநின்னையல்லா லினியாரை நினைக்கேனே. 8

நெறியேநின்மலனே நெடுமாலயன் போற்றிசெயுங்
குறியேநீர்மையனே கொடியேரிடையாள் தலைவா
மறிசேரங்கையனே மழபாடியுள் மாணிக்கமே
யறிவேநின்னையல்லா லினியாரை நினைக்கேனே 9

ஏரார்முப்புரமு மெரியச்சிலைதொட்டவனை
வாரார்கொங்கையுடன் மழபாடியுள் மேயவனைச்
சீரார்நாவலர்கோ னூரனுரைத்ததமிழ்ப்
பாரோரேத்தவல்லார் பரலோகத்திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர் - வச்சிரத்தம்பேசுவரர்

தேவியார் - அழகாம்பிகையார்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவடிகளே சரணம்

உ

சிவமயம்

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த

# திருவாசகம்

——!——

## குயிற்பத்து

ஆத்தும விரக்கம்

தில்லையிலருளிச் செய்யப்பட்டது

ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கீதமினியகுயிலே கேட்டியேலெங்கள் பெருமான்
பாதமிரண்டு வினவிற் பாதாளமேழினுக்கப்பாற்
சோதிமணிமுடிசொல்லிற் சொல்லிறந்து நின்றதொன்மை
பாதிகுணமொன்றுமில்லான் னந்தமிலான்வரக்கூவாய். 1

ஏர்தருமேழுலகேத்த வெவ்வுருவந்தன்னுருவா
யார்கலிசூழ்தென்னிலங்கை யழகமர்வண்டோதரிக்குப்
பேரருளின்பமளித்த பெருந்துறைமேயபிரானைச்
சீரியவாயாற்குயிலே தன்பாண்டி நாடனைக்கூவாய். 2

நீலவுருவிற்குயிலே நீள்மணிமாடநிலாவுங்
கோலவழகிற்றிகழுங் கொடிமங்கையுள்ளுறைகோயிற்
சீலம்பெரிதுமினிய திருவுத்தரகோசமங்கை
ஞாலம் விளங்கவிருந்த நாயகனைவரக்கூவாய் 3

தேன்பழச்சோலை பயிலுஞ் சிறுகுயிலேயிதுகேணீ
வான் பழித்திடும்மண் புகுந்து மனிதரையாட்கொண்டவள்ள
லூன்பழித்துள்ளம் புகுந்தென் னுணர்வதுவாய வொருத்தன்
மான்பழித்தாண்ட மென்னேக்கி மணாளனை நீவரக்கூவாய்.4

---

*சிவனைக் கண்டிரங்கல்.

சுந்தரத்தின் பக்குயிலே சூழ்சுடர்ஞாயிறுபோல
வந்தரத்தேநின்றிழிந்திடுங் கடியவராகையதுப்பான
முந்துநடுவுமுடிவுமாகிய மூவரறியாச்
சிந்துரச்சேவடியானைச் சேவகனைவரக்கூவாய்.

இன்பந்தருவன் குயிலே ஏழுலகும்முழுதாளி
அன்பனமுதளித்தூறு மாணந்தன்வானவந்ததேவ
னன்பொன்மணிச்சுவடொத்த நற்பரிமேல்வருவானைக்
கொம்பின்மிழற்றுங்குயிலே கோகழிநாதனைக்கூவாய் 6

உன்னையுகப்பன் குயிலேயுன் றுணைத்தோழியுமாவாள்
பொன்னைபழித்தநன்மேனிப் புகற்றிகழுமழகன்
மன்னன்பரிமிசைவந்த வள்ளல்பெருந்துறைமேவ
தென்னவன் சேரலன் சோழன் சீர்புயங்கள் வரக்கூவாய் 7

வாவிங்கே நீகுயிற்பிள்ளாய் மாலொடுநான்முகன்றேடி
போவியவருன்னிநிற்ப வொண்டழல்விண்பிளந்தோங்கி
மேவியன்றண்டங்கடந்து விரிசுடராய் நின்றமெய்யன்
ருவிவரும்பரிப்பாகன் றூழ்சடையோன்வரக்கூவாய் 8

காருடைப்பொன்றிகழ்மேனி கடிபொழில்வாழுங்குயிலே
சீருடைசெங்கமலத்திற்றி கழுருவாகியசெல்வன்
பாரிடைப்பாதங்கள் காட்டிப்பாசமறுத்தெனையாண்ட
வாருடையம்பொன்மேனி யமுதினை நீவரக்கூவாய் 9

கொந்தணவும் பொழிற்சோலைக் கூவுங்குயிலேயிதுகேணீ
யந்தணனாகிவந்திங்கே அழகியசேவடிகாட்டி
எந்தமராமிவனென்றிங் கென்னையுமாட்கொண்டருளுஞ்
செந்தழல்போற்றிருமேனித் தேவர்பிரான்வரக்கூவாய் 10

## திருச்சிற்றம்பலம்

———

# திருச்சாழல்

—!—

## சிவனுடைய காருணியம்*

## தில்லையி லருளிச் செய்யப்பட்டது

## நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா

## திருச்சிற்றம்பலம்

பூசுவதும்வெண்ணீறு பூண்பதுவும்பொங்கரவம்
பேசுவதுந்திருவாயான் மறைபோலுங்காணேடீ
பூசுவதும்பேசுவதும் பூண்பதுவுங்கொண்டென்னை
யீசனவனெவ்வுயிர்க்கு மியல்பானான் சாழலோ 1

என்னப்பனெம்பிரா னெல்லார்க்குந்தானீசன்
றுன்னம்பொய் கோவணமாக் கொள்ளுவதுவென்னேடீ
மன்னுகலைதுன்னு பொருண் மறைநான்கே வான்சுடராத்
தன்னையேகோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. 2

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலிதந்தையிலி தான்றனியன் காணேடீ
தாயுமிலிதந்தையிலி தான்றனியனாயிடினுங்
காயலுலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ. 3

அயனையநங்கனை யந்தகனைச் சந்திரனை
வயனங்கண்மாயா வடுச்செய்தான்காணேடீ
நயனங்கண் மூன்றுடைய நாயகனே தண்டித்தாற்
சயமன்றேவானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. 4

தக்கனையுமெச்சனையுந் தலையறுத்துத் தேவாகணந்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதா னென்னேடீ
தொக்கனவந்தவர் தம்மைத் தொலைத்தருளியருள் கொடுத்த
கெச்சனுக்குமிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ. 5

---

* சிவனுடைய அருட்சக்தி விளையாட்டு

அலரவனுமாலவனு மறியாமேயழலுருவாய்
நிலமுதற்கீழண்டமுற நின்றதுதானென்னேடீ
நிலமுதற்கீழ்கண்டமுற நின்றிலனேலிருவருந்தஞ்
சலமுகத்தாலாங்காரந் தவிரார்காண் சாழலோ. 6

மலைமகளையொருபாகம் வைத்தலுமேமற்றொருத்தி
சலமுகத்தாலவன் சடையிற் பாயுமதுவென்னேடீ
சலமுகத்தாலவன் சடையிற் பாய்ந்திலனேற் றரணிஎல்லாம்
பிலமுகத்தேபுகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ

கோலாலமாகிக் குரைகடல்வ யன்றெழுந்த
வாலாலமுண்டானவன் சதுர்தானென்னேடீ
ஆலாலமுண்டிலனே லன்றயன்மாலுள்ளிட்ட
மேலயதேவ ரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. 8

தென்பாலுகந்தாடுந் தில்லைச்சிற்றம்பலவன்
பெண்பாலுகந்தான் பெரும்பித்தன்காணேடீ
பெண்பாலுகந்திலனே பேதாயிரு நிலத்தோர்
விண்பாலியோ கெய்தி வீடுவர்காண் சாழலோ. 9

தானந்தமில்லான் றனையடைந்தநாயேனை
யானந்தவெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
யானந்தவெள்ளத் தழுத்துவித்ததிருவடிகள்
வானுந்துதேவர்கட்கோர் வான் பொருள்காண் சாழலோ 10

நங்காயிதென்னதவ நரம்போ டெலும்பணிந்து
கங்காளர்தோண்மேலே காதலித்தான்காணேடீ
கங்காளமாமாகேள் காலாந்தரத்திருவர்
தங்காலஞ்செய்யத் தரித்தனன் காண் சாழலோ. 11

கானார்புலித்தோ லுடைதலையூண்காடுபதி
யயனாலவனுக்கிங் காட்படுவாராரேடீ
ஆனாளங்கேளா யயனுந்திருமாலும்
வானாடர்கோவும் வழியடியார் சாழலோ. 12

மலையரையன்பொற்பாவை வாணுதலால்பெண்டிருவை
யுலகறியத்தீவேட்டா னென்னுமதுவென்னேடீ

யுலகறியத்தீவேளா தொழிந்தனனே னுலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெலாங் கலங்கிடுங்காண்சாழலோ 13

தேன்புக்கதண்பணைசூழ் தில்லைச் சிற்றம்பலவன்
றான்புக்குநட்டம் பயிலுமதுவென்னேடீ
தான்புக்குநட்டம் பயின்றிலனேற் றரணியெல்லா
மூன்புக்கவேற்நாளிக் கூட்டாங்காண் சாழலோ. 14

கடகரியும்பரிமாவுந் தேருமுகந்தேருதே
இடபமுகந்தேறியவா றெனக்கறியவியம்பேடீ
தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்தவந்நாளி
லிடபமதாய்த்தாங்கினான் றிருமால்காண் சாழலோ. 15

நன்றாகநாவலர்க்கு நான்மறையினுட்பொருளை
யன்றாலின்கீழிருந்தங் கறமுறைத்தான்காணேடீ
யன்றாலின்கீழிருந்தங் கறமுறைத்தானாயிடினுங்
கொன்றான்காண்புரமூன்றுங் கூட்டோடே சாழலோ. 16

அம்பலத்தேகூத்தாடி யமுதுசெயப்பலிதிரியு
நம்பனையுந்தேவனென்று நண்ணுமதுவென்னேடீ
நம்பனையுமாமாகே ணான் மறைகடாமறியா
வெம்பெருமானீசாவென் றேத்தினன்காண் சாழலோ. 17

சலமுடைய சலந்தரன்ற னுடறடிந்தால்லாழி
நலமுடையநாரணற்கன் றருளியவாறென்னேடீ
நலமுடையநாரணன்ற னயனமிடந்தரனடிக்கி
நலராகவிடவாழி யருளினன்காண் சாழலோ. 18

அம்பர மாம்புள்ளித்தோ லாலாலமாரமுத
மெம்பெருமானுண்டசது ரெனக்கரியவியம்பேடீ
எம்பெருமானே துடுத்தங் கேதமுதுசெய்திடினுந்
தம்பெருமைதானறியாத் தன்மையன்காண் சாழலோ. 19

அருந்தவருக்காலின்கீ ழறமுதலாநான்கனையு
மிருந்தவருக்கருளுமது வெனக்கறியவியம்பேடீ
யருந்தவருக்கறமுதனான் கன்றருளிச்செய்திலனேற்
றிருந்தவருக்குலகியற்கை தெரியாகாண் சாழலோ. 20

**திருச்சிற்றம்பலம்**

# அச்சோப்பதிகம்

——?——

## அனுபவ வழி யறியாமை¤

## தில்லை யிலருளிச் செய்யப்பட்டது

## கலி விருத்தம்

## திருச்சிற்றம்பலம்

முத்திநெறியறியாத மூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப் பழவினைகள்பாரும்வண்ணஞ்
சித்தமலமறுவித்துச் சிவமாக்கியெனையாண்ட
வத்தனெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே 1

நெறியல்லாநெறிதன்னை நெறியாகநினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணங்
குறியொன்றுமில்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும்வண்ணமருளியவா றார்பெறுவா ரச்சோவே. 2

பொய்யெல்லாமெய்யென்று புணர்முலையார்போகத்தே
மையனுறக்கடவேனை மாளாமேகாத்தருளித்
தையலிடங்கொண்டபிரான் றன்கழலேசேரும் வண்ண
மையனெனக்கருளியவா றார்பெறுவா ரச்சோவே. 3

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக்கடவேனை
யெண்ணமிலாவன்பருளி யெனையாண்டிட்டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீறணிவித்துத் தூய்நெறியேசேரும்வண்ண
மண்ணலெனக்கருளியவா றார்பெறுவா ரச்சோவே 4

பஞ்சாய வடிமடவார் கடைக்கண்ணாலிடர்பட்டு
நெஞ்சாயதுயர்கூற நிற்பேனுன்னருள்பெற்றே
னுஞ்சேஞனுடையானே யடியேனைவருகவென்
றஞ்சேலென் றருளியவா றார்பெறுவா ரச்சோவே. 5

வெந்துவிழுமுடற்பிறவி மெய்யென்றுவினைபெருக்கி
கொந்துகுழற்கோவளையார் குவிமுலைமேல்வீழ்வேனை
பந்தமறுத்தெனையாண்டு பரிசறவென் றுரிசுமறுத்
தந்தமெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே. 6

---

அனுபவத்ததிசயம்.

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக்கடவேனைப்
பையவேகொடுபோந்து பாசமெனுந்தாழுருவி
யுய்யுநெறிகாட்டுவித்திட் டோங்காரத்துட்பொருளை
யையனெனக்கருளியவா ருர்பெருவா ரச்சோவே. 7

சாதல்பிறப்பென்னுந் தடஞ்சுழியிற் றடுமாறிக்
காதலின்மிக்கணியிழையார் கலவியிலேவிழுவேனை
மாதொருகூறுடையபிரான்றன் கழலேசேரும்வண்ண
மாதியெனக்கருளியவா ருர்பெறுவா ரச்சோவே. 8

செம்மைநலமறியாத சிதடரொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்து முதலாயமுதற்வன்று
னம்மையுமோர்பொருளாக்கி நாய்சிவிகையேற்றுவித்த
வம்மையெனக்கருளியவா ருர்பெறுவா ரச்சோவே. 9

திருச்சிற்றம்பலம்

## நால்வர் துதி

### திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் துதி

புனலிலேடெதிர் செல்லெனச் செல்லுமே புத்தனுர் தலை தத்தெனத் தத்துமே கனலிலேவிடப் பச்சென்றிருக்குமே கதவுமாமறை காட்டிலடைக்கும், பனையிலாண்பனை பெண் பனையாகுமே பழையவென்புபொற் பாவையதாகுமே, சிவ வராவிடந் தீரெனத்தீருமே சிறந்த சம்பந்தர் செந்தமிழ் பாடலே.

### திருநாவுக்கரசு சுவாமிகள் துதி

தலைகொணஞ் சமுதாக விளையுமே தழலினீ றுதடாகம தாகுமே கொலைசெயானை குனிந்துபணியுமே கூரராவிடந் தீரெனத்தீருமே, கலைகொள்வேதவனப்பதி தன்னுளேகதவு மீண்டு கடுகத்திறக்குமே, அலைகொள்வாரியிற் கல்லுமிதக் குமே அப்பர் போற்று மருந்தமிழ் பாடலே.

### சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

வெங்கராவுண்ட பிள்ளையை நல்குமே வெள்ளைவாரண மீதிலிருத்துமே, மங்கைபாகரைத் தூதுநடத்துமே மருவி யாது வழிபட்டு நிற்குமே, செங்கலானது தங்கமதாகுமே

திசழுமாற்றிட்ட செம்பொ னளிக்குமே, தூங்கவாம்பரி சேரற்கு நல்குமே துலங்கு நாவலூர்ச் சுந்தரர் பாடலே.

## மாணிக்கவாசக சுவாமிகள் துதி

பெருகும் வைகைதனை யழைப்பிக்குமே பிரம்படிக்கும் பிரான் மேனிகன்றுமே நரியெலாம் பரியாக நடத்துமே நாடி முமைதனைப் பேசுவிக்குமே பரிவிற்பிட்டுக்கு மண்சுமப்பிக் குமே, பரமனேடெழுதக் கோவைபாடுமே, வருகும்பித்தரை வாதினில் வெ[illegible]ல்லுமே வாதவூரார் வழங்கிய பாடலே.

## நால்வர் துதி

அப்பருக் கெண்பத் தொன்றருள் வாதவூரருக்குச்
செப்பரிய நாலெட்டிற் றெய்வீக—மிப்புவியிற்
[illegible]ந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதிறு றறி.

## ந[illegible]ர் [illegible]த்தியடைந்த நாள்

சித்[illegible]ரை[illegible]தப்பர் சிறந்தவைகாசிமூலத்
[illegible]த்[illegible]ரை[illegible]னிசம்பந்த ரானிமாதத்திலந்த
மு[illegible], [illegible]வா[illegible]ஆூரர் முதியநல்லாடிதன்னிற்
சுத்[illegible]மாஞ்சோ[illegible]ரிற் சுந்தரர்கயிலைசேர்ந்தார்
அங்கமாமடந்[illegible]ாக வாழியிற்கருங்கலோர்
வங்கமாகமுன்னர்செக்கன மாழையாகமூகையர்
மங்கைவாய்மலர்ந்துபேச வந்துதித்தநால்வர் தம்
பங்கயப்பதம்பணிந்து பாடியாடுவாமரோ.

## திருத்தொண்டர்கள் சேக்கிழார் சுவாமிகள் துதி

தில்லைவாளந்தணரே முதலாகச்சீர் படைத்த [போற்றி
தொல்லையதாந்திருத்தொண்டைத் தொகையடியார்பதம்
ஒல்லையவர் புராணத்தை யுலகறியவிரித்துறைத்த
செல்வமலிகுன்றத்தூர்ச் சேக்கிழாரடி போற்றி.

## திருச்சிற்றம்பலம்

## நால்வர் துதி முற்றிற்று

ஸ்ரீ தனலட்சுமி பிரிண்டர்ஸ், சென்னை-1.